Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் திசைரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஆவணி மீ 18 ஆம் உ திங்கட்கிழமை (03 - 09 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 13 ஓசை 197

## தமிழ் அகதிகள் தொகை 1 லட்சத்தைத் தாண்டியது

(சென்னை)

இதுவரை ஒரு லட்சத்து நூற்றி ஐம்பது இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றடைந்துள்ளனர்.

நேற்று முன்னூறு பேர் தமிழகம் சென்றடைந்ததுடன், தற்பொழுது வடபகுதியில் அமுல் படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட் (4 ஆம் பக்கம் பார்க்க)

தரையிறங்கி இரண்டாவது நாளாகியும்...

# புலிகளின் தாக்குதலால் படை முடங்கியுள்ளது

## இராணுவத்தில் பலர் இறந்துள்ளதாக அரசு அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரையோரங்களில் நேற்று முன்தினம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவம் மேலும் முன்னேற முடியாதவாறு விடுதலைப் புலிகள் கடந்த நாற்பத்தெட்டு மணித்தியாலங்களாக கடுமையான எதிர்த் தாக்குதல் நடாத்தி வருகின்றார்கள். இதனால் இராணுவம் முன்னேற முடியாது தரையிறங்கிய இடத்திலேயே உள்ளது.

நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரையோரத்தில் கடற்படை படகுகள் மூலமும், விமானப்படை ஹெலிக்கொப்ரர் மூலமும் முள்ளிவாய்க்கால் என்னும் இடத்தில் இறக்கி விடப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை சுற்றிவளைத்த விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் முகாமைநோக்கி முன்னேறும் முயற்சியை முறியடித்து கடுமையான தாக்குதலை நடாத்தி வருகின்றனர். முல்லைத்தீவு முகாமுக்கு அண்டிய பகுதிகளில் இந்த இராணுவத்தினர் இறக்கப்பட்டிருந்த போதிலும் விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலால் பெரும் இழப்புகளை சந்தித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டுவீச்சுக்கு முஸ்லிம் வீடுகள் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் முஸ்லிம்களின் வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நிபாரக், அஸீஸ் பரிஸ், பரிணன் ஆகியோரின் வீடுகளும், கடைகளுமே இவ்வாறு சேதமடைந்துள்ளன. இவைகளைத் தவிர அருளானந்தம் என்பவருக்குச் சொந்தமான கராச்சும், கடையும் எரிந்து சாம்பலாகிவிட்டன. (58)

## இராணுவம் சுட்டுக் கொன்றது

(மட்டக்களப்பு)

கடந்த 28 ஆம் திகதி வந்தாறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தால் காலை ஆறு மணியளவில் ஆறுமுகம் இராசரத்தினம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## அரச அதிபர்கள் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறை குறித்து அரசுடன் பேச்சு நடத்தும் வகையில் மன்னார் அரச அதிபரும் கப்பல்மூலம் கொழும்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னையரின் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

தமிழீழபிரதேசத்தில் தமிழ் மக்களை அழிக்க கங்கணம் கட்டிநிற்கும் சிங்களஇனவாத அரசு மக்கள்மீது மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும், பொருளாதார நெருக்கடியையும் நீக்கக் கோரியும், அதன்மூலம் ஏற்படும் பட்டினிச்சாவை தவிர்க்குமுகமாகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## படுகோலைகளைக் கண்டித்து தமிழகத்தில் உண்ணாவிரதம்

(சென்னை)

இலங்கையில் சிறிலங்கா இராணுவத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைக்கண்டித்து நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் 450 இலங்கைத் தமிழர்கள் ஒரு நாள் உண்ணாவிரதமிருந்தனர்

நாகபட்டினத் துணை ஆட்சியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஒருநாள் உண்ணாவிரதத்தில் 97 பெண்களும், 77 குழந்தைகளும் கலந்துகொண்டனர்.

## யாழ். கைப்பற்ற முடியாமைக்கு படையினர் பற்றாமையே காரணம்

- இராணுவத் தளபதி வனசிங்க

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை இதுவரை கைப்பற்ற முடியாமல் உள்ளமைக்கு இராணுவப் பற்றாக்குறையே காரணமென்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வனசிங்க தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதாயின் மொத்தமாக ஆறாயிரம் இராணுவத்தினர் தேவையென்றும் தற்பொழுது மூவா (4 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியை விட மக்களின் உரிமை மேலானது

- வி. பி. சிங்

பதவியைவிட மக்களின் உரிமை மேலானது என பாரதப் பிரதமர் வி.பி. சிங் கூறுகிறார். நேற்று குஜராத்திலுள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்படி கருத்தைக் கூறினார்.

மண்டலக் கமிஷன் அறிக்கையின்படி சமூகத்திற் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை அமுல்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள முடிவை ஆட்சேபித்து கிளம்பியுள்ள எதிர்ப்புக்குச் சவாலாக மேற்படி கருத்தை வி. பி. சிங் கூறினார்.

## பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராம்

### நியூயோர்க் டைம்சிற்கு ஹமீத் பேட்டி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் இடம் பெறுகின்ற போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த தயாரா (4ஆம் பக்கம் பார்க்க)

## 4 இராணுவம் கால்களை இழந்தது

(புல்மோட்டை)

புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து இரட்டைமலை இராணுவ முகாமுக்குப் போகும்போது விடுதலைப் புலிகள் வைத்திருந்த பொறிவெடியில் சிக்கிய இராணுவத்தினர் நால்வர் தமது கால்களை இழந்தனர்.

கால் இழந்த இராணுவத்தினரை ஏனைய இராணுவத்தினர் தூக்கிச் சென்றனர்.

## பிரேமதாசா-ஜா சந்திப்பு விரைவில் இடம்பெறலாம்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத் ஜா விரைவில் சந்தித்துப் பேசுவார் என கூறப்படுகின்றது.

வடக்குக் கிழக்கில் சுமுக நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி இலங்கை ஜனாதிபதியுடன் கதைப்பார் எனவும் கருதப்படுகிறது.

கடந்த வாரம் இந்திய லோக்சபாவில் இந்தியப் பாராளுமன்றக் குழுவினை இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கு விரை (4 ஆம் பக்கம் பார்க்க)

## யாக்கரையில் அதிபரும் ஆசிரியரும் குண்டுவீச்சுக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

குண்டுவீச்சு விமானங்கள் வெள்ளியன்று யாக்கரைப் பகுதியில் குண்டுவீச்சு நடாத்தியதில் யாக்கரை வித்தியாசாலையின் அதிபரும் ஆசிரியரும் கொலையுண்டனர்.

யாக்கரை வித்தியாசாலையின் அதிபர் பொன் சோமாஸ்கந்தசிவம் (வயது 58) என்பவரும் அவருடைய மனைவி ஆசிரியை சோமாஸ்கந்தசிவம் மங்களநாயகி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்களுடைய மகள் ஆதி (வயது 20) என்பவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் குண்டுவீச்சு நடந்த சமயம் யாக்கரைப் பிள்ளையார் கோயிலில் தங்கியிருந்தனர். (லோ)

## மா இறக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

திருச்கோணமலையிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

# அல்லைப் பாலத்தில் 5 படைபலி; 42 பேர் காயம்

## விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கந்தளாய்க்கு அண்மையில் உள்ள அல்லைப்பாலம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறி வந்த இராணுவத்தை விடுதலைப் புலிகள் வழி மறித்துத் தாக்கியதில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்கு ஓடி விட்டனர். விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப் பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**விரிவிளம்பரம்**

## மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி மலிவு விற்பனை. தொடர்பு: 392. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமையில்)

(R/601)

## ஆடு, மாடு திருடியவன் பிடிபட்டான்

(கிளிநொச்சி)

பட்டியில்நின்ற30 ஆடுகளையும்,எருத்து மாடு ஒன்றையும் தன்னந்தனியாளாகச் சென்று திருடிச் சென்ற திருடன் ஒருவனை விடுதலைப் புலிகள் மடக்கிப் பிடித்தனர்.

இச் சம்பவம் கிளிநொச்சியில் இடம் பெற்றது. இத் துணிகரத் திருட்டில் ஈடுபட்டவன் பாரதிபுரத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் ஆவான்.

ஆடுகளையும் எருத்து மாட்டையும் திருடி விற்ற இந்த இளைஞன், பட்டியில் நின்ற மற்றும் ஒரு எருத்து மாட்டை திருடச் சென்ற போதே மடக்கிப் பிடிக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டான். (49)

## லொறி மோதி வயோதிபர் மரணம்

(கல்வியங்காடு)

எழுபது வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் லொறியால் மோதுண்டு பலியானார்.

கல்வியங்காட்டு சந்தைக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம் பெற்றது. (நி)

### அரச சார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களுக்கு

# அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும்படி யாழ். பிரசைகள் குழு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவும் வகையில் ஒரு மாதகாலத்துக்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளையும், உலர் உணவுப் பொருட்களையும், குழந்தைகளுக்கும், சிறார்களுக்குமான பால்மா வகைகளையும் உடன் அனுப்பி உதவுமாறு யாழ். பிரசைகள் குழு, கொழும்பிலுள்ள அரசசார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களின் கூட்டு அமைப்பின் ஆளுனருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஒரு மாதத்துக்குத் தேவையான உணவு,மருந்து,பால்மா வகைகளைக் கப்பலில் அனுப்பி உதவுமாறும், மாரி மழை ஆரம்பமாவதற்கு முன்னர் மிகுதித் தேவைகளை அனுப்பி வைக்குமாறும். கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## 600 தொன் மா வந்தது

(பருத்தித்துறை)

அறுநூறு தொன் மாவுடன் திருகோணமலையிலிருந்து புறப்பட்ட கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்தது. (நி)

## மூவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம்தீவுப்பகுதியில் பலத்த காயமடைந்த மூவர் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சி. அகஸ்டின் (32 வயது ஊர்காவற்றுறை),செல்லம்மா (72 வயது சாட்டி), இம்மானுவேல் (58 வயது, கரம்பன் கிழக்கு) என்பவர்களே இவ்வாறு மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர் (நி)

## முல்லையில் இரவு ஹெலித் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் இரவு வேளைகளில் ஹெலிகொப்ரரிலிருந்து பராவெளிச்சம் போடப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கி இரவுப் பொழுதைக் கழித்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (58)

## நோயாளர் மாட்டு வண்டியில்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் யாழ்-போதனா வைத்தியசாலைக்கு நோயாளரை எடுத்துச் செல்வதற்கு, கட்டை மாட்டு வண்டிகளே இப்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன,

யாழ் குடாநாட்டில் பெற்றோல், டீசல் எண்ணெய் வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதனாலேயே மாட்டு வண்டிகள் உபயோகப்படுத்தப்படுவதற்குக் காரணமாகும். (மா)

## ரூபக்குளத்தில் படை காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ரூபக்குளம் எனும் இடத்தில் நடமாடிய இராணுவம் விடுதலைப்புலிகளின் பொறிவெடியில் சிக்கினர் இதில் ஒரு இராணுவம் பலத்த காயமடைந்தது.

## வவுனியாவில் புதிய அரச அதிகாரிகள் நியமனம்

(வவுனியா)

வவுனியாவில் அரச அதிகாரிகளாக புதியவர்கள் சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் வவுனியாவில் இடம் பெற்ற இராணுவத் தாக்குதலினால் பல அரச அதிகாரிகள் லீவில் சென்றுள்ளனர். இதையடுத்து அரச அதிகாரிகளுக்குரிய வெற்றிடங்களை, புதியவர் சிலரை நியமித்து நிரப்புவதற்கு வவுனியா அரச அதிபர் நடவடிக்கை எடுத்தார். இதன் காரணமாகவே புதிய அரச அதிகாரிகள் நியமனம் இடம் பெற்றது.

வவுனியா சிங்களப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக குலரட்ணா என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காணி உத்தியோகத்தராக அல்பிரட் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சியாம் பிள்ளை என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு உதவி அரச அதிபராக விசாகப்பெருமாள் நியமனம் செய்யப்பட்டது தெரிந்ததே. (தி)

சாவகச்சேரி, கல்வயல்

சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள். அவர்களின்

(தியாகராஜக் குருக்கள்)

### தசாக கிரகயக்ஞ அழைப்பு

29. 08. 1990 புதன்கிழமை இரவு சிவபதமடைந்த எமது தந்தையாரின் தகனக் கிரியைகள் 30. 08. 1990 வியாழக்கிழமையன்று நடைபெற்றது. அவரின் ஆத்ம சாந்திக்காக பின்வரும் திகதிகளில் நடைபெறும் கிரியைகளில் பங்குபற்ற அன்புடன் அழைக்கின்றோம்.

07-09-90 வெள்ளிக்கிழமை (10ஆம் நாள்)
தசாகம்
10-09-90 திங்கட்கிழமை (13ஆம் நாள்)
கிரகயக்ஞம்

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

(R. 609)

விடுதலை வேள்வியில்
ஆகுதி ஆன நம்
வேங்கைகள் காலடி
நாமும் தொடருவோம்......

சுதந்திர ஈழத்தின்
சுந்தர நிழலிலே
விடுதலை கீதத்தை
வீறுடன் பாடுவோம்......

தாயக பூமியின்
தாகம் தணித்து நம்
தியாக தீபங்களை
ஏற்றி வணங்குவோம்......



# கண்ணா இண்டஸ்றீஸ்

மானிப்பாய்

(B- 1420)

## சிந்தனைக்கு

சதையைத் துண்டு துண்டாக்கினு முன் னெண்ணம்
சாயுமோ - ஜீவன் - ஓயுமோ?

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 03-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# படுகொலைக்குப் பதக்கங்கள்

தீவுப்பகுதியில் கடந்த வாரம் சிறிலங்கா அரச படைகளினால் முன்னூறுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கில் காயப்படுத்தப்பட்டார்கள். தீவுப் பகுதியில் குறிப்பாக மண்டைதீவுப் பகுதியிலே இப்படுகொலைகள் பெருமளவு நிகழ்ந்துள்ளன.

இலங்கைத் தமிழ் மக்களுக்குப் படுகொலைகள் புதியதல்ல. சிறிலங்கா இராணுவத்தின் ஒதியமலைப் படுகொலையில் இருந்து இந்திய இராணுவத்தின் வல்வெட்டித்துறை படுகொலை வரை அளவில் சின்னதும் பெரியதுமான பல படுகொலைகளைத் தமிழ் மக்கள் சந்தித்துள்ளார்கள்.

கடந்த வாரம் நிகழ்ந்த மண்டைதீவுப் படுகொலைகள் இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரசில் 1919 இல் ஜாலியன்வாலா பார்க்கில் நிகழ்ந்த படுகொலைக்கு ஒப்பானதாகும். மக்கள் தப்பியோட முடியாத மதில் சுவரால் ஜாலியன்வாலா பார்க் மைதானத்திற்குள் அகப்பட்டுக் கொண்டது போலவே கடற்பரப்பால் சூழப்பட்ட மண்டைதீவுப் பகுதியினுள் மக்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். இது கொலைகாரர்களுக்குச் சாதகமாகப் போய்விட்டது.

பொதுவாக இப்படுகொலைகள் மக்களைப் பீதியில் ஆழ்த்தும் எண்ணத்துடனேயே செய்யப்படுகின்றன. இப்படுகொலைகள் மண்டைதீவுப் பகுதி மக்களுக்கு மட்டும் எதிராகச் செய்யப்படுபவையல்ல. முழு தமிழ் இனத்திற்கும் எதிராகவே செய்யப்படுகின்றன. இப்படுகொலைகளைக் கண்டு மக்கள் பயப்பீதி கொள்ள வேண்டும், போராட்ட உணர்வில் இருந்து விடுபட்டுமண்டியிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன.

அதேவேளை இந்த இனப்படுகொலைகளைப் புரிந்த இராணுவ அதிகாரிகளுக்கு தமது தரப்பில் இருந்து பதக்கங்களும், பரிசில்களும், பாராட்டுக்களும் கிடைப்பது வழக்கம். ஜாலியின்வாலாபார்க் படுகொலைக்கு கட்டளை இட்ட ஜென்ரல் டயருக்கு பிரிட்டன் பிரபுக்கள் சபை பாராட்டு வழங்கியதோடு 20,000 பவுண் பண முடிப்பையும் அன்பளிப்பாக வழங்கியது. இந்த வரிசையில் மண்டைதீவுப் படுகொலைக்கு தலைமை தாங்கிய சிறிலங்கா இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவிற்கு பதக்கங்கள், பரிசில்கள், பாராட்டுக்கள் கிடைக்கலாம்.

ஆயுதபாணிகளான இராணுவத்தினர் அப்பாவிப் பொது மக்களைப் படுகொலை செய்வதற்குத் தான் இப் பாராட்டும் பதக்கங்களும் என்றால் இதற்கு ஜெனரல் டயரோ, மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவோ தேவை இல்லை. சாதாரண கசாப்புக் கடைக்காரனே போதும்.

அதேவேளை ஜாலியன்வாலா பார்க் படுகொலையைப் புரிந்ததினால் இந்திய விடுதலைப் போராட்டம் நின்று விட்டதாகவோ மக்கள் சோர்வடைந்து விட்டதாகவோ இல்லை. மாறாக சுதந்திரப் போராட்டம் தீவிரம் பெற்று இந்தியா சுதந்திரம் அடைந்தது. ஜெனரல் டயரும் லண்டனில் இந்தியன் ஒருவனாலேயே கொல்லப்பட்டான்.

அதே போன்று கடந்தகால தமிழர் மீதான படுகொலைகள் தமிழரின் சுதந்திரப் போராட்ட உணர்வை மழுங்கடித்து விடவில்லை. போராட்டம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. எதிரியின் அடக்குமுறை அதிகரிக்க மக்களின் போராட்ட உணர்வு அதிகரித்துச் செல்லும் என்பது வரலாறு தந்த பாடம்.

## இலாபத்தில் சங்கம்

(புதுக்குடியிருப்பு)

மக்கள் முன்னணியினர் தொழிற்சங்கங்கள் மீது அதிக அக்கறை செலுத்தத் தொடங்கியதைத் தொடர்த்து புதுக்குடியிருப்பு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் கடந்த மூன்று மாதமாக இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

விசேட கணக்குப் பரிசோதகர்களின் நடவடிக்கையைத் தொடர்ந்து கிளை முகாமையாளர்களினால் இதுவரை காலமும் செலுத்தப்படாத ரூபா ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட சோர்வுப் பணத்தை மேற்படி சங்கத்துக்கு வருகின்ற ஐந்தாம் திகதிக்கு முன்னர் செலுத்தும்படி பணிக்கப்பட்டுள்ளனர். (58)

# துயரத்தின் பின் விடுதலை

1918இன் இறுதி மாதங்களிலும், 1919 இன் தொடக்க மாதங்களிலும் இந்தியாவில் அதற்கு முன் கண்டிராத அளவில் ஒரு வேலை நிறுத்த இயக்கம் தொடங்கியது. 1918 டிசம்பரில் பம்பாய் ஆலை வேலை நிறுத்தம் ஆரம்பித்து 1919 ஜனவரியில் 125,000 தொழிலாளர்கள் அதில் கலந்து கொண்டனர். 1919 இன் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டு மார்ச்சில் சட்டமான ரவுலட் சட்டங்கள், யுத்தகாலச் சட்டங்கள்காலாவதியான பின் அரசாங்கத்தின் அரிய அடக்குமுறைகளான வழக்குமன்ற நடவடிக்கை இன்றியும், விசாரணை இன்றியும் சிறைப்படுத்தும் கொடுமையை நீடிக்கும் நோக்குடன் இயற்றப்பட்டவை.

இச் சமயத்தில் தான் அமிர்தசர் கொடுமை நிகழ்ந்தது. (ஜாலியன் வாலாப் டடு கொலை) வெளியேற வழியின்றி அடைப்பாக இருந்த இடத்தில் கூடியிருந்த நிராயுதபாணிகளான மக்கள் மீது ஜெனரல் டயர் வெடிமருந்தை 1,600 முறைகள் சுட்டான். (அரசாங்கத் தகவலின் படி) 379 பேர் இறந்தனர். ''கூட்டத்தில் இருந்தோருக்குஇடையில் மட்டும் அல்ல, குறிப்பாக பஞ்சாப்காரர்கள் அனைவருக்கும் இடையில் ஒரு நியாயவுணர்வு உண்டாக்க வேண்டும் என்று இராணுவக் கண்ணோட்டத்தோடு'' தான் சுட்டதாகக அவன் பின்னர் தன் நோக்கத்தை விளக்கினான். அதாவது, மக்களைப் பீதியில் ஆழ்ந்த வேண்டும் என்பதே அவன் நோக்கம். இந்தப் படு கொலையைப் பற்றிய விபரமான தகவல்கள் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களுக்குக் கூட நான்கு மாதங்களுக்குப் பிறகுமெல்ல மெல்ல ஊர்ந்து வந்தன என்றால் அது இந்தியாவைப் போர்த்தி இருந்த அடக்குமுறை சவச்சீலையின் பெருமை ஆகும். எட்டு மாதங்கள் வரை அதைப் பற்றின செய்திகள் யாவும் அதிகார பூர்வமான முறையில் மறைக்கப்பட்டன. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் கூடத் தெரிவிக்கப்படவில்லை. கிளர்ச்சியும் காங்கிரஸ் விசாரணையும் தொடங்கவே ராஜதந்திர காரணங்களுக்காக இக் கொடுமை பற்றி விசாரணை செய்து கண்டனம் செய்வதற்காக அரசு ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டியதாயிற்று.

ஆனால்ஜெனரல் டயர் தன் தீரச் செயலுக்காக ஏகாதிபத்திய வாதிகளால் புகழாரம் சூட்டப் பெற்றதோடு (20 000 ஸ்ரேலிங் பவுண்ஸ் அடங்கியதொரு முடிப்பு உட்பட) பிரபுக்கள் சபையின் பாராட்டும் பெற்றான்.

பஞ்சாப்பில் இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. பெரு வாரியாகச் சுடுதல், தூக்கில் இடுதல், ஆகாயத்தில் இருந்து குண்டு வீசுதல் இந்தக் கொடிய ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட வழக்கு மன்றங்கள் மனம் போன போக்கில் தண்டனை விதித்தல் ஆகியவை பற்றிய செய்திகள் பின்னர் நடந்த விசாரணைகளில் இருந்து சிறுகச் சிறுகத் தான் இப்போதும் கிடைக்கின்றன. இந் நிலைமையின் போக்கைக் கண்டு காந்தி திகில் அடைந்தார்.

நன்றி: இன்றைய இந்தியா

> இந்தியாவில் 1919 ஆம் ஆண்டளவில் ஓர் அரசியற் கொந்தளிப்பு சூழ்நிலை நிலவியது. இந்த அரசியற் கொந்தளிப்பை அடக்கும் நோக்குடனேயே ஜாலியன் வாலாபாக் படுகொலைகள் செய்யப்பட்டன.

# சவுதியில் இருந்து அமெரிக்கா முதலில் தாக்க சம்மதியோம்

- சவுதி பாதுகாப்பு அமைச்சர்

(றியாட்)

சவுதி அரேபியாவில் இருந்து அமெரிக்கத்துருப்புகள் முதலில் தாக்குதல் நடத்த தமது நாடு சம்மதிக்காது என சவுதி அரேபியாவின் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஈராக்கின் ஆக்கிரமிப்புப் போக்கில் இருந்து சவுதி அரேபியாவை பாதுகாக்கவே அமெரிக்க இராணுவமும், ஏனைய நாடுகளின் ராணுவமும் வரவழைக்கப்பட்டன என்று வலியுத்திப் பேசினார்.

இதேவேளை வளைகுடாவில் படைபலம் அதிகரிக்கப்பட்டது ஈராக்கின் ஆட்சியை வீழ்த்துவதற்கு அல்ல என்று பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சர் டக்ளஸ் ஹேட் அறிவித்துள்ளார்.

## இந்திய ஏஜென்ட் என பெனாஸிர் மீது குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ இந்தியாவுக்கான ஏஜென்டாக இயங்கினார் என்று புதிய இடைக்கால அரசு குற்றம் சாட்டியுள்ளது.

பூட்டோ மீதான இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்படும் என்றும் பாகிஸ்தானிய இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

## ஜோர்ஜ் புஷ் - கொர்பசேவ் உச்சி மகாநாடு

(வாஷிங்டன்)

வளைகுடாப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை கெல்சிங்கியில் சந்திக்கவிருக்கிறார்கள்.

வளைகுடாப் பிரச்சினை குறித்து, குறிப்பாக ஈராக்கிய படையெடுப்புக் குறித்து இரு நாடுகளும் ஒத்த கருத்தினைக் கொண்டிருந்தாலும் சவுதி அரேபியாவில் அமெரிக்க ராணுவம் குவிக்கப்பட்டிருப்பது கவலையைத் தருவதாக கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

## நிவாரணம் வந்தது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கப்பலில் வந்த உணவுப் பொருட்களுடன் போரூட் நிறுவனம் அனுப்பி வைத்திருந்த நிவாரண பொருட்களடங்கிய நாலாயிரம் பொதிகளும் வந்தடைந்துள்ளது. இந்த பொதிகள் ஒவ்வொன்றையும் மக்களிடம் செஞ்சிலுவை சங்கத்தினூடாக வினியோகம் செய்யப்பட உள்ளது.

## இராணுவ நடவடிக்கைகளினால் கட்டிடங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் கடந்த இருபத்திரண்டாம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக பல லட்ச ரூபா பெறுமதியான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

ஊர்காவற்துறைபலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடம் சேதமடைந்ததில் 30லட்ச ரூபாவும், வாங்கி இன்னும் மதிப்பிடப்படாத புதிய லொறி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

வேலணை கூட்டுறவுச் சங்க கட்டிடம் முற்றாக சேதமடைந்து விட்டது. இதே நேரம் காரைநகரில் உணவு பொருள்பற்றாக்குறை இருந்த பொழுதிலும் கூட்டுறவு சங்கங்களுக்கு உணவு கொண்டு போய் சேர்க்க முடியாதுள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் கூறியுள்ளார். (லோ)

## உதவி செய்ய இந்தியா தயார்

(டில்லி)

குவைற்றுக்கும், ஈராக்கிற்கும் மருந்துப் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் அனுப்புவது தொடர்பான சர்வதேச முயற்சிகளில் சேர்ந்து கொள்ள இந்தியா தயார் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் ''ஐ. நா. தாபனம் தடைகளை விதித்திருக்கிறது என்பதால் அரசியல் லாபத்திற்காக ஒரு நாட்டை பட்டினியால் வாடவிடக்கூடாது என்பதே இந்தியாவின் கருத்தாகும்.'' என்று தெரிவித்தார்.

# சிறிலங்கா அரசின் போலிவேஷத்தை அம்பலப்படுத்த அணி திரளுவோம்

## - மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அகதி முகாம்களில் நோயினாலும், பட்டினியாலும் இறந்துகொண்டிருக்கும் எமது மழலைச் செல்வங்களுக்காகவும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எமது மக்கள் எதிர்நோக்கியுள்ள அவல நிலையைத்தெரியப்படுத்தும்முகமாகவும், இனவாத சிறிலங்கா அரசின் போலி வேஷத்தை சர்வதேச அரங்கிற்கு அம்பலப்படுத்துவதற்காகவும் அன்னையர் முன்னணியினரால் இன்று நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அனைத்து மக்களும் கலந்துகொள்வதுடன், மாணவர்களும் அணிதிரள வேண்டுமென்று மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

மனித நேயத்தை பேணுவதாக கூறும் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பட்டினிச் சாவை திணித்துக் கொண்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கில் முழுமையான அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவுக்கு தமிழ் அரச அதிபர் நியமனமாகலாம்

வவுனியா அரசாங்க அதிபராக மீண்டும் தமிழ் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கைக்காக அண்மையில் வவுனியா அரச அதிபராக நியமனம் பெற்ற ரட்னாயகா கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கலைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அதிகாரியாகச் செயலாற்றி வந்த தமிழர் வவுனியா அரச அதிபராக நியமிக்கப்பட உள்ளார் என்று வவுனியா கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கையைஅடுத்து வவுனியா அரசஅதிபராகப் பணிபுரிந்து வந்த திரு. செ. பத்மநாதன் கொழும்புக்கு அழைக்கப்பட்டு, அவரின் இடத்திற்கு வவுனியா இராணுவ இணைப்பதிகாரியாக சேவையாற்றிவந்த கேர்ணல் ரட்னாயக நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (தி)

## இராணுவம் படுகாயம்

கட்டைபறிச்சானில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவ வீரர் ஒருவர் படுகாயமடைந்தார்.

# கடலில்ஹெலித் தாக்குதல்; ஒருவர் காயம்

பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்ற பலர் மீது கடந்த புதன்கிழமை ஹெலிகொப்ரர் ஒன்று தாக்குதல் நடத்தியது. இச்சம்பவத்தினால் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் பூநகரி தம்பிராயைச் சேர்ந்த திரு செபஸ்தியாம்பிள்ளை மரியதாஸ் (30) என்பவராவார். (24)

### பிறேமா - ஜா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் அனுப்பிவைக்கப்படுவர் என வெளியுறவுத் துறை இணையமைச்சர் கூறியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், வடக்குக்கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை நிறுத்தி சுமுக நிலையை கொண்டுவர இந்திய அரசாங்கம் விரும்புகிறது என்பதை தெரிவிக்கும் முகமாகவும், சில ராஜதந்திர நல்லெண்ண முயற்சியாகவும் இச் சந்திப்பு அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பேச்சு வார்த்தை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவே உள்ளது என்று நீதியமைச்சரும், இனங்களுக்கிடையிலான சமாதானக் குழுவின் தலைவருமான ஏ. ஸி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் டைம்ஸ் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் போதே எந்தக் கட்டத்திலும் விடுதலைப் புலிகளுடன் பேச அரசாங்கம் தயாராக இருப்பதாக ஹமீட் தெரிவித்தார்.

### அரச அதிபர்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவுள்ளார்.

தற்பொழுது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் கப்பலில் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் கொழும்பு செல்ல உள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

### யாழ். கைப்பற்ற

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிரம் பேரே உள்ளனர் என்று அவர் கூறியுள்ளதுடன் கூடிய விரைவில் மேலும் இராணுவத்தினர் யாழ். நோக்கி வரவழைக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரச நிர்வாகத்தை அமுல்படுத்த சற்றுக் காலதாமதமாகும் என்று கூறியுள்ளதுடன், தற்பொழுது புலிகளின் நிலைகளைத் தாக்குவதே இராணுவத்தினரின் இலக்கு என்றும் பின்பு புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்ததாக வெரித்தாஸ் தெரிவித்தது.

### தமிழ் அகதிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் நிமித்தம் அகதிகளின் வருகை சற்று குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு மாதங்களில் வந்த அகதிகள் தொகை 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின் வந்த அகதிகள் தொகையை விட அதிகரித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

# ஐ. நா. வுக்கு 5 இலட்சம் கையெழுத்துப் பிரதிகள்

(கொழும்புத்துறை)

வடக்குக் கிழக்கில் இடம்பெறும் அரச பயங்கரவாதத்தை உலகநாடுகள் அனைத்தும் உடன் கண்டித்து தமிழரின் போராட்டத்திற்கு பூரண ஆதரவுநல்கவேண்டுமெனவும், தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணவும், தமிழ் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயம் தவறுமானால் ஐந்து லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்துப் பெறப்பட்டு ஐக்கியநாடுகள் சபையின் கவனத்திற்கு ஓர்மகஜர் அனுப்பிவைக்கப்படுமென்று தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றத்தின் அமைப்பாளர் திரு. எஸ். கஜேந்திரநாத் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்மன்றம் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்திடம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளுக்குத் திருப்தியான பதில் கிடைக்காதுவிடின் ஐந்துலட்சம் தமிழ்மக்களின் கையெழுத்துத்திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (24)

# தமிழகத்தில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு; 7 பேர் பலி

(சென்னை)

சென்னைக்கருகிலுள்ள திருவல்லிக்கேணி என்னுமிடத்தில் தமிழக பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் பன்னிரெண்டு பேர் பலத்த காயமடைந்தார்கள்.

இரண்டு மதக் கும்பல்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலை தடுத்து நிறுத்தும் வகையிலேயே பொலிஸாரால் இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் சென்னை நகர் பொலிஸ் கமிஷனர் திரு. இராஜசேகரம் நாயர் பலத்த காயமடைந்ததுடன், பொலிஸ் வான் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. கலகக்காரர்களால் நடத்தப்பட்ட கல்வீச்சுக்கு அரச வாகனங்கள் பல சேதமடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கடைகள் திறக்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா பஜார் வீதி கடைகள் அனைத்தையும் இயங்க வைப்பதற்கு அரச அதிபரும் இராணுவ மேலிடமும் ஒழுங்கு செய்த போதிலும் தற்போது சில கடைகள் மட்டுமே இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

'சுத்தானந்தபவன்' என்ற சைவச் சாப்பாட்டுக் கடை உட்பட இரு பலசரக்குக் கடைகள் இயங்குகின்றன (தி)

### புலிகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் அவ்விடத்திலேயே நிற்பதாக அங்கிருந்து கிடைத்தள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. இருந்தும் இராணுவத்தின் இழப்புக்களின் எண்ணிக்கை எதுபற்றியும் தகவல் கிடைக்கவில்லை.

இதே சமயம் நேற்று மாலை கிடைத்த அரசு செய்திக் குறிப்புகளின்படி சிறிலங்கா அரசின் முப்படைகளும் இணைந்து இரு பிரிவாக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து விட்டதாகவும், இராணுவத்தினர் தரப்பில் பலர் உயிரிழந்துள்ளதாகவும் இச் செய்திக் குறிப்பு ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும் தரைப்படைகளுக்கு ஆதரவாக பீரங்கிப் படகுகளும், விமானப்படை விமானங்களும் தாக்கி வருவதாகவும் அச் செய்திக் குறிப்புக் கூறுகிறது. (லோ)

### அல்லைப் பாலத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல்சம்பவம்பற்றி கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 42 பேர் காயமடைந்ததாகவும் வெரித்தாஸ்வானொலி செய்தி வெளியிட்டது.

இத்தாக்குதலின்போதுஇராணுவத்தினரிடம் இருந்து ரி,56 ரக துப்பாக்கிகள் நான்கு அதற்கான ரவைகள் 116, கிரனெட் நான்கு, ரவைக் கூடுகள் 16 இராணுவ தலைக் கவசம் நான்கு, இராணுவம் பாவனைக்குட்படுத்தும் குடி தண்ணீர் போத்தல் இரண்டு என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

**வீரமரணம்**

இம்மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் பெனடிக் வீரமரணம் அடைந்தார். இவருக்கு புலிகள் தங்கள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## வடமராட்சியில் அனுமதிபத்திரம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். மாவட்டத்திலிருந்து வெளியேறும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வடமராட்சி கிழக்கிலும் வைத்து வழங்குவதற்கானஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, மருதங் கேணி பகுதிகளில் வைத்தே இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (36)

### முல்லை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கென கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மா அங்கு ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தமையினாலும், இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்தமையினாலும் இறக்கப்படவில்லை என்று தெரியவருகிறது. (நி)

### அன்னையரின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களைப் பெற்றுத்தர துரிதநடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அரச அதிபரைக் கோரி யாழ். மாவட்ட அன்னையர்முன்னணியினர் இன்று ஊர்வலம் ஒன்றை நடாத்த உள்ளனர்.

இந்த ஊர்வலம் இன்று காலை 9-00 மணியளவில் நல்லூர் முத்திரைச் சந்தையிலிருந்து ஆரம்பமாகி கச்சேரி நல்லூர் வீதியூடாக யாழ். செயலகத்தைச்சென்றடைந்து அரசஅதிபரிடம் பொது அமைப்புகளினதும், சங்கங்களினதும், சனசமூக நிலையங்களினதும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை கையளிக்கும்

இந்த ஊர்வலத்தில் அனைத்து பொது அமைப்புகளும் மக்களும் பங்குகொண்டு இனவாத அரசின் அடக்கு முறைகளையும், தமிழ் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன என்ற கண்துடைப்பு நடவடிக்கையையும்சர்வதேச உலகிற்கு வெளிப்படுத்துமாறு அன்னையர் முன்னணியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## திரு. பொ. சோமாஸ்கந்தசிவம்

(அதிபர், யார்க்கரவு விநாயகர் வித்தியாலயம்)

## திருமதி மங்களநாயகி சோமாஸ்கந்தசிவம்

(ஆசிரியை, யார்க்கரவு விநாயகர் வித்தியாலயம்)

ஆகிய இருவரும் வெள்ளியன்று (31. 08. 1990) அகால மரணமாகிவிட்டார்கள். இவர்கள் செல்வி சோ. ஆதி (சா/ இந்துக் கல்லூரி உயர்வகுப்பு மாணவி) யின் பெற்றோரும், காலஞ்சென்ற பொ. சிவராமலிங்கம் (S. P. H I.), பொ. சிவபாதசுந்தரம் (R. M. P.) ஆகியோரின் சகோதரரும், மைத்துனியும், செல்வி இ. நல்லநாயகி (ஆசிரியை, யார்க்கரவு வி. வி.) அக்காவும், அத்தானுமாவர். இறுதிக் கிரியைகள் யாவும் நடைபெற்றது என்பதை உற்றார், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

பொ. சிவபாதசுந்தரம்
''அருளகம்''
சங்கத்தானை.

(R.610)

## பரராசசிங்கம் சபேசன்

வண். வடமேற்கு கேசாவில் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த பரராசசிங்கம் சபேசன் 01-09-90 அன்று காலமானார். அன்னார் திரு. பரராசசிங்கம் (சுவிஸ்) ஜெயகேந்திரவதி ஆகியோரின் அன்பு மகனும், பாமினி, பவித்திரா, நிரோசன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, பவளம், காலஞ்சென்ற தர்மலிங்கம், இராசம்மா ஆகியோரின் பேரனும், குருசாமி, பொன்னம்மா ஆகியோரின் பூட்டனும், பத்மநாதன் (நாதன் தொழிற்சாலை, வண்ணார்பண்ணை) குணசிங்கம் (சுவிஸ்), சந்திரா, லோகேஸ்வரி (சுவிஸ்), சுந்தரம்பிள்ளை, பவளம், கணேசலிங்கம், புஸ்பராணி, பரமேஸ்வரன், நேசமலர் ஆகியோரின் பெறாமகனும், தங்கராசா (கனடா), ரஞ்சினிதேவி, நிர்மலாதேவி, இராசலிங்கம், கனகலட்சுமி ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-09-90 காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

வண்ணார்பண்ணை.

க. இராமகிருஷ்ணர்

(R/611)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.